# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 80/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வேலம்மாள் | Caste | : | |
| Father/Husband Name | : | முருகன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2024**

**முதல் விசாரணை**

நான் திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.4 எனது கணவர் ஆவார். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. இறந்துபோன ரமேஷ்பாபு எனது மகன் ஆவார். விபந்து நடந்தது சம்பந்தமாக போலீசார் என்னிடம் தகவல் சொன்னார்கள். கடந்த 30.05.2017 ஆம் தேதியில் எனது மகன் ரமேஷ்பாபு TATA ACE வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, சாலையில் நிறுத்தியிருந்த ஈச்சர் லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று, போலீசார் தகவல் சொன்னார்கள். நான் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றுபார்த்தேன். அங்கு எனது மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 80/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகன் | Caste | : | |
| Father/Husband Name | : | சந்திரபோஸ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2024**

**முதல் விசாரணை**

நான் திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறேன். காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. இறந்துபோன ரமேஷ்பாபு எனது மகன் ஆவார். விபந்து நடந்தது சம்பந்தமாக போலீசார் என்னிடம் தகவல் சொன்னார்கள். கடந்த 30.05.2017 ஆம் தேதியில் எனது மகன் ரமேஷ்பாபு TATA ACE வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, சாலையில் நிறுத்தியிருந்த ஈச்சர் லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று, போலீசார் தகவல் சொன்னார்கள். நான் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றுபார்த்தேன். அங்கு எனது மகன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 80/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Caste | : |
| Father/Husband Name | : கருப்பையா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2024**

**முதல் விசாரணை**

நான் செக்கானூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு காலை 06.00 முதல் 07.00 மணி இருக்கும். நான் செக்கானூரணி அருள்நகரில் உள்ள எனது Workshop-ல் இருந்தேன். அப்போது ஜீவா லாரி சாலையின் ஓரமாக லோடு இறக்கி கொண்டிருந்தார்கள். அப்போது பயங்கரமான சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது, மேற்படி லாரியின் மிது TATA ACE வாகனம் மோதி நின்றுகொண்டிருந்தது. மேற்படி வாகனத்தின் எண் எனக்கு தெரியாது. மேற்படி TATA ACE வாகனத்தில் இருந்த இருநபருக்கும் காயம் ஏற்பட்டது. லாரியிலிருந்த ஒரு நபருக்கு லேசான காயம் ஏற்பட்டது. லாரியை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 30.05.2017 ஆம் தேதியில் காலை 08.00 மணியளவில் நான் TN 58 S 5574

என்ற லாரியில் மதுரை - தேனி மெயின்ரோட்டில் அருள்நகரில் பொருட்களை இறக்குவதற்காக சென்றபோது, மேற்படி வாகனத்தை ஓட்டிவந்த மாரியப்பன் என்பவர் ரோட்டில் நிறுத்தக்கூடாத இடத்தில் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் நிறுத்தினார் என்றும், அப்போது அவருக்கு பின்னால் வந்த TN 64 P 7863 என்ற TATA ACE வாகனம் எதிர்பாராவிதமாக மோதியது என்றும், அருகில் இருந்த நானும் எனது மகன் அரவிந்த், சிவன் மற்றும் ரவி என்பவரும் ஓடி சென்று காயம்பட்ட நபர்களை தூக்கினோம் என்றும், பின்னர் விசாரித்ததில் மேற்படி TATA ACE வாகனத்தை ஓட்டி வந்த ரமேஷ்பாபு என்பவருக்கு உடம்பில் இரத்தக்காயமும், அருகில் அமர்ந்துவந்த சரவணக்குமாருக்கு நடு நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது என்று, காயம்பட்ட அவர்களை ஆம்புலன்சு மூலம் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாகவும் உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று லோடு இறக்கிய ஈச்சர் வண்டி சம்பவம் நடப்பதற்கு அரை மணிநேரம் முன்பிலிருந்து சரக்குகளை இறக்கி கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி லாரி தார் சாலையிலிருந்து ஓரமாக மண் தரையில் நின்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி இறக்கி கொண்டிருக்கும்போதுதான் மேற்படி TATA ACE வண்டி பின்னால் இருந்து மோதியது என்றால் சரிதான். மேற்படி லாரி நிறுத்தியிருந்த மண் தரையிலிருந்து அருகில் இருந்த தார் சாலையில் வாகனங்கள் எந்த தங்கு தடையின்றி சென்றுவந்தது என்றால் சரிதான். மேற்படி TATA ACE வண்டி ஓட்டி வந்த ஓட்டுநர்தான் கவனக்குறைவாக எங்கள் வண்டி மீது மோதிவிட்டார் என்றால் சரிதான்.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 80/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபு | Caste | : |
| Father/Husband Name | : விருமாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2024**

**முதல் விசாரணை**

நான் செக்கானூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் லோடுமேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். கடந்த 2017 ஆம் ஆண்டில் காலை 07.30 மணியளவில் ஜீவா லாரி சர்வீஸ் சேர்ந்த ஈச்சர் லாரியை எதிரி ஓட்டி வந்தார். செக்கானூரணி அருகே அருள் நகர் என்ற இடத்தில் சாலையின் ஓரமாக மேற்படி ஈச்சரை நிறுத்தி நான் லோடு இறக்கி கொண்டிருந்தேன். அப்போது பயங்கரமான சத்தம் கேட்டது. நான் வண்டியிலிருந்து தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்தேன். எங்கள் ஈச்சர் வண்டியின்மீது குட்டியானை வண்டி மோதியது. வண்டி எண் தெரியவில்லை. அந்த வண்டியை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு கால் முட்டியில் அடிபட்டு இருந்ததால் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 30.05.2017 ஆம் தேதியில் காலை 08.00 மணியளவில் நான் TN 58 S 5574

என்ற லாரியில் மதுரை - தேனி மெயின்ரோட்டில் அருள்நகரில் பொருட்களை இறக்குவதற்காக சென்றபோது, மேற்படி வாகனத்தை ஓட்டிவந்த மாரியப்பன் என்பவர் ரோட்டில் நிறுத்தக்கூடாத இடத்தில் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் நிறுத்தினார் என்றும், அப்போது அவருக்கு பின்னால் வந்த TATA ACE வாகனம் எதிர்பாராவிதமாக மோதியது என்றும், இதனால் எனக்கு வலது கை மற்றும் வலது பக்க இடுப்பில் காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி TATA ACE வாகனத்தில் வந்த ரமேஷ்பாபு மற்றும் சரவணப்பாண்டி ஆகியோருக்கு உடல்முழுவதும் இரத்தக்காயம் இருந்தது என்றும், காயம்பட்ட எங்களை ஆம்புலன்சு மூலம் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாகவும் உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் லோடு இறக்கிய ஈச்சர் வண்டி சாலையிலிருந்து ஓரமாக இறங்கி மண் சாலையில் நின்று சரக்குகளை இறக்கினேன். விபத்து நடப்பதற்கு அரை மணிநேரம் முன்பிலிருந்து சரக்குகளை இறக்கி கொண்டிருந்தோம். மேற்படி இறக்கி கொண்டிருக்கும்போதுதான் மேற்படி TATA ACE வண்டி பின்னால் இருந்து மோதியது என்றால் சரிதான். நாங்கள் நிறுத்தியிருந்த மண் தரையிலிருந்து அருகில் இருந்த தார் சாலையில் வாகனங்கள் எந்த தங்கு தடையின்றி சென்றுவந்தது என்றால் சரிதான். மேற்படி TATA ACE வண்டி ஓட்டி வந்த ஓட்டுநர்தான் கவனக்குறைவாக எங்கள் வண்டி மீது மோதிவிட்டார் என்றால் சரிதான்.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 80/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டிமுருகன் | Caste | : |
| Father/Husband Name | : குருசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2024**

**முதல் விசாரணை**

நான் மதுரை, அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் ஆவார். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. கடந்த 30.05.2017 ஆம் தேதியில் காலை 08.00 மணியளவில் எனது மகன் சரவணப்பாண்டி TATA ACE வாகனத்தில், ஒட்டுநர் ரமேஷ்பாபுவுடன் மதுரையிலிருந்து சருக்கு ஏற்றி கொண்டு தேனி நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது கே. புளியங்குளம் அருகே அருள்நகர் என்ற இடத்தில் சாலையில் நிக்கக்கூடாத இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஈச்சர் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டதாக, தகவல் சொன்னார்கள். பின்னர் நாங்கள் மதுரை அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தோம். எனது மகனுக்கு நெற்றி பொட்டு, கால் ஆகிய இடங்களில் அடிபட்டு இருந்தது.

மருத்துவர் எனது மகன் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.